பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

15 04 2025 **TUESDAY** 12 40 **PM**

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பளுதூக்கும் வீராங்கனை கர்னம் மல்லேஸ்வரி, இளம் விளையாட்டு வீரர்களுக்கு வழிகாட்டியாக திகழ்வது பாராட்டுக்குரியது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. இந்தியாவிலிருந்து ஹஜ் யாத்திரை செல்வோரின் எண்ணிக்கை கடந்த பத்தாண்டுகளில் வெகுவாக அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி வலுவாக உள்ளது என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்

4. அரசியலமைப்பு சட்டத்தின் படி, மாநில உரிமைகளை பாதுகாக்க ஓய்வு பெற்ற நீதிபதி திரு. குரியன் ஜோசப் தலைமையில் உயர்நிலைக் குழு அமைப்பதற்கான தீர்மானத்தை தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்தார்.

5. ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் இன்று கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

பளுதூக்கும் வீராங்கனை கர்னம் மல்லேஸ்வரி, இளம் விளையாட்டு வீரர்களுக்கு வழிகாட்டியாக திகழ்வது பாராட்டுக்குரியது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற தடகள வீராங்கனையான கர்னம் மல்லேஸ்வரி ஹரியானா மாநிலம், யமுனா நகரில் நேற்று தம்மை சந்தித்ததை சமூகவலைதளத்தில் அவர் பகிர்ந்துள்ளார்.

சிறந்த வீராங்கனையான மல்லேஸ்வரின் வெற்றிகளால் நாடு பெருமிதம் அடைவதாகவும் பிரதமர் அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

இந்தியாவிலிருந்து ஹஜ் யாத்திரை செல்வோரின் எண்ணிக்கை கடந்த பத்தாண்டுகளில் வெகுவாக அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய சிறுபான்மையினர் நல அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், கடந்த 2014ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 36 ஆயிரமாக இருந்த எண்ணிக்கை இந்த ஆண்டு ஒரு லட்சத்து 75 ஆயிரமாக அதிகரித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இந்திய ஹஜ் கமிட்டி மூலம் பிரதான ஒதுக்கீட்டின் கீழ் இந்த ஆண்டு ஒரு லட்சத்து 22 ஆயிரத்திற்கும் அதிகமான யாத்திரிகர்கள் ஹஜ் பயணம் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

விமானப் பயணம், உள்ளூர் போக்குவரத்து, மினா முகாம் மற்றும் தங்குமிடம் உள்ளிட்ட ஏற்பாடுகள் சவுதி அரேபியா வழிகாட்டுதலுக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், எஞ்சிய ஒதுக்கீட்டின் அடிப்படையில் செல்வோருக்கான ஏற்பாடுகளை தனியார் பயண ஏற்பாட்டாளர்கள் தான் செய்து வருவதாகவும் சிறுபான்மையினர் நல அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியாவின் திருத்தியமைக்கப்பட்ட விதிமுறைகளின் படி, நாட்டில் உள்ள ஹஜ் பயண ஏற்பாட்டாளர்களுக்கு உரிய ஒதுக்கீடுகளை முன்கூட்டியே வழங்கிவிட்டதாகவும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தில் அஇஅதிமுக – பிஜேபி இடையே ஏற்பட்டுள்ள கூட்டணி, இயற்கையான கூட்டணி என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி வலுவாக இருப்பதாக தெரிவித்தார்.

திமுக அரசு மீது மக்கள் அதிருப்தியில் இருப்பதாகவும், தேசிய ஜனநாயக கூட்டணி, திமுகவை ஆட்சியிலிருந்து அகற்றும் என்றும் திரு. எல். முருகன் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

மும்பை – கோவா நெடுஞ்சாலைப் பணிகள் இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முடிவடையும் என்று மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்த சாலைப் பணிகள் முடிவடையும் போது, கொங்கன் பகுதிக்கு செல்லும் சாலை மேம்படுத்தப்பட்டதாக இருக்கும் என்று தெரிவித்தார்.

இதன் மூலம் பயணிகள் சுகமான பயணத்தை மேற்கொள்ள முடியும் என்றும் திரு. நிதின் கட்கரி கூறினார்.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்திற்கு உட்பட்ட **Lasana** பகுதியில் பாதுகாப்புப் படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையை தொடர்ந்து அப்பகுதிக்கு கூடுதல் படை வீரர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

**Lasana** மற்றும் **Surankote** பகுதிகளில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலின் பேரில், ராணுவத்தினர் - ஜம்மு காஷ்மீர் காவல்துறையினருடன் இணைந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டபோது, நேற்று மாலை தீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினரை நோக்கி துப்பாக்கியால் சுட்டதை அடுத்து, இருதரப்பினருக்கும் இடையே கடும் சண்டை நடைபெற்றது.

அப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளதாக ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<

சட்டவிரோத பணப்பரிவர்த்தனை குற்றச்சாட்டின் பேரில், தொழிலதிபரும், காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி. பிரியங்கா காந்தியின் கணவருமான திரு. ராபர்ட் வதேராவுக்கு அமலாக்கத்துறை இரண்டாவது முறையாக சம்மன் அனுப்பியுள்ளது.

ஹரியானாவில் உள்ள **Shikhopur** நில விற்பனையில் நடந்த முறைகேடு தொடர்பாக அவருக்கு இந்த சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில், தம்மீதான குற்றச்சாட்டு பொய்யானது என்றும், இதுவொரு அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை என்றும் திரு. ராபர்ட் வதேரா கூறியுள்ளார்.

>>>>><<<<<

அரசியலமைப்பு சட்டத்தின் படி, மாநில உரிமைகளை பாதுகாக்கவும், மத்திய – மாநில அரசுகளுக்கு இடையேயான நியாயமான உறவுகளை மேம்படுத்தவும், உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி திரு. குரியன் ஜோசப் தலைமையில் உயர்நிலைக் குழு அமைப்பதற்கான தீர்மானத்தை தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்தார்.

சட்டப்பேரவையில் இன்று அறிக்கை ஒன்றை தாக்கல் செய்து பேசிய அவர், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. அசோக்வர்தன் ஷெட்டி, மாநில திட்டக்குழுவின் முன்னாள் துணைத்தலைவர் திரு. நாகநாதன் ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளதாக கூறினார்.

மாநில பட்டியலில் இருந்த கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட துறைகள் ஒத்திசைவு பட்டியலுக்கு மாற்றப்பட்டதால், நீட் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டிய முதலமைச்சர், ஜிஎஸ்டி காரணமாக மாநில அரசு வருவாய் ஈட்டுவது குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்த தீர்மானத்திற்கு அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து அஇஅதிமுக மற்றும் பிஜேபி உறுப்பினர்கள் சட்டப்பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன், தமிழக அரசின் இந்த நடவடிக்கை பிரிவினைவாதத்தை தூண்டுவதாக உள்ளது என்றார்.

மேலும், தேர்தல் நேரத்தில் இதுபோன்ற பிரச்சினைகளை திமுக அரசு எழுப்பி வருவதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டினார்.

>>>>><<<<<

அஇஅதிமுக செயற்குழுக் கூட்டம் அடுத்த மாதம் 2ஆம் தேதி சென்னையில் நடைபெறும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கட்சியின் மாவட்ட, மாநிலச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

டீசல் விலை மற்றும் சுங்கக்கட்டணத்தை குறைக்க வலியுறுத்தி கர்நாடக லாரி உரிமையாளர்கள் மற்றும் முகவர்கள் சங்க கூட்டமைப்பினர் இன்று முதல் வேலைநிறுத்தத்தை தொடங்கியுள்ளனர்.

நள்ளிரவு தொடங்கிய இந்த வேலைநிறுத்தத்தால், கர்நாடகாவில் சரக்கு போக்குவரத்து முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், கர்நாடகா வழியாக பிற மாநிலங்களுக்குச் செல்லும் லாரிகளும் இயங்காததால், தமிழகத்தின் கிருஷ்ணகிரி மாவட்ட எல்லையில் லாரிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ராஜா 45 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

அமெரிக்கா - ஈரான் இடையேயான அணுசக்தி குறித்த அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை ரோம் நகரில் வரும் சனிக்கிழமை நடைபெறும் என்று இத்தாலி வெளியுறவு அமைச்சர் திரு. **Antonio Tajani** தெரிவித்துள்ளார்.

இந்த அமைதிப் பேச்சுக்கான மத்தியஸ்தராக செயல்படும், ஓமன் நாட்டின் வேண்டுகோளின் படி, இந்த பேச்சுவார்த்தையை இத்தாலியில் நடத்த ஒப்புக் கொண்டிருப்பதாக அவர் கூறினார்.

பிரச்சினைக்கு தீர்வு காண ஏதுவாக அமைதிப் பேச்சுவார்த்தைக்கான உதவிகளை இத்தாலி மேற்கொள்ளும் என்றும் திரு. **Antonio Tajani** தெரிவித்தார்.

**>>>>><<<<<**

நவீன இந்தியாவிற்கான அடித்தளத்தை வகுக்க வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவர் அண்ணல் அம்பேத்கர் என்று ஐ.நாவுக்கான நிரந்தர பிரதிநிதி திரு. ஹரிஷ் தெரிவித்துள்ளார்.

அம்பேத்கரின் பிறந்த நாளை ஒட்டி, நியூயார்க்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், அரசியல் சாசன சிற்பியான அண்ணல் அம்பேத்கர் நாட்டின் சுதந்திரப் போராட்டத்திலும் முக்கிய பங்கு வகித்தவர் என்று கூறினார்.

**>>>>><<<<<**

ராஜஸ்தான் மற்றும் குஜராத் மாநிலங்களின் ஒரு சில இடங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு வெப்ப அலை வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பஞ்சாப், ஹரியானா மற்றும் மத்தியப் பிரதேசத்தின் மேற்குப் பகுதிகளிலும் இதே நிலை நிலவக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளா மற்றும் மாஹே பகுதியிலும் வெப்பத்தின் தாக்கம் அதிகரிக்கக்கூடும் என அந்த மையம் கூறியுள்ளது.

**>>>>><<<<<**

ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் இன்று கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி, சண்டிகரில் இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>><<<<<

தேசிய சீனியர் ஆடவர் ஹாக்கி சாம்பியன் போட்டியின் இறுதியாட்டத்தில் மத்தியப்பிரதேச அணி இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

>>>>>END<<<<<